இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 11.06.2026


# ஸ்ரீவைகுண்டம் பெண்ணும் சிங்கப் பெண் படையும்!

**வி**ஜய் ஆட்சியில் விஜய் கட்சிக்காரர்களால் எத்தகைய குற்றச் செயல்கள் நடக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம் ஸ்ரீவைகுண்டம் சம்பவம்.

**“விஜய்யின் தீவிர ரசிகையான என்னை ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ.வின் பெயரைச் சொல்லி அழைத்துச் சென்று கூட்டு பலாத்காரம் செய்தார்கள்” என்று கதறுகிறார் அந்தப் பெண்.**

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே ஆறுமுகநேரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம், த.வெ.க. கட்சியில் தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகியாக இருக்கிறார். அவரது நண்பர் ராமநாதபுரத்தைச் சேர்ந்த ஜெயபால். இவரும் த.வெ.க. நிர்வாகிதான். இவர்கள் இருவரும் சேர்ந்துதான் இந்தச் செயலைச் செய்துள்ளார்கள். பிரச்சினை பெரிது ஆனதும் வேறு வழியில்லாமல் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**“நான் 1997 ஆம் ஆண்டுமுதல் விஜய்யின் தீவிர ரசிகை. ரசிகர் மன்றத்திலும் தொடர்ந்து செயல்பட்டு வந்தேன். இப்போது ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. ஆகி இருக்கும் அன்னை விஜி சரவணனுடன் இணைந்து கடந்த இரண்டு வருடமாக கட்சிப் பணியாற்றி வந்தேன். அப்போது பாலசுப்பிரமணியம் அறிமுகம் ஆனார். அவர் எனக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார். அதற்காக ராமநாதபுரம் அழைத்துச் சென்றார். சரவணன் பெயரைச் சொன்னதால்தான் நானும் சென்றேன். காரில் செல்லும் போது கலர் பாட்டிலில் ஏதோ கலந்து கொடுத்தார்கள். அதனால் மயக்கம் அடைந்தேன். அவரும் இன்னொருவரும் சேர்ந்து என்னை பாலியல் வன்கொடுமை செய்தனர். ‘சரவணன் தான் கூட்டி வரச் சொன்னார்’ என்று அவர்கள் சொன்னார்கள். இதை வெளியில் சொன்னால், ‘உனது குழந்தையை கொலை செய்துவிடுவோம்’ என்றார்கள். மே மாதம் 3 தேதி இது நடந்தது.**

**இது பற்றி சரவணனிடம் கேட்டேன். ‘புஸ்ஸி ஆனந்திடம் சொல்லி உனக்கு வேலை வாங்கித் தருகிறோம், இதை பெரிது படுத்தாதே’ என்று எம்.எல்.ஏ. சரவணன் சொன்னார். என்னோடு சேர்ந்து இன்னொரு பெண்ணும் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று என் காலில் விழுந்து அழுதுள்ளார். இது பற்றி அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவிடம் சொன்னேன். அமைச்சர் ஜெகதீஸ்வரியிடமும் சொன்னேன். யாரும் சரவணன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை”** என்கிறார் அந்தப் பெண்.

**“எனக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தவறான தகவலைச் சொல்கிறார் அந்தப் பெண்”** என்கிறார் எம்.எல்.ஏ. சரவணன். இவ்வளவுதான் அவரது பதிலே!

1997 ஆம் ஆண்டு முதல் விஜய் ரசிகையாக இருந்தவருக்கு நடந்திருக்கும் அவலம் இது. விஜய் கட்சி ஆரம்பித்ததில் இருந்து அதில் செயல்பட்டவருக்கு நடந்த கொடுமை இது. ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ.வான அன்னை விஜி சரவணனிடம் பணியாற்றி உள்ளார். கேரளாவில் லாட்டரி தொழில் பார்த்து வந்த அவருக்கு கணக்கு வழக்குகள் பார்த்து வந்துள்ளார் இந்தப் பெண். இத்தகைய பெண்ணுக்கு விஜய் கொடுத்த நீதி என்ன? த.வெ.க. கட்சியில் இருந்து அவரை நீக்கியதுதான் நீதி. இதைவிடக் கேவலமான, படுமோசமான முதலமைச்சர் இருக்க முடியுமா?

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணனை, எம்.எல்.ஏ. பதவியை விட்டு விலக வைத்திருக்க வேண்டாமா? அவரை கட்சியை விட்டு நீக்கி இருக்க வேண்டாமா? அவரைக் கைது செய்திருக்க வேண்டாமா? இது எதையும் செய்யவில்லை முதலமைச்சர் விஜய். இதுதான் அவர் ஆட்சி நடத்தும் லட்சணமா?

பாதிக்கப்பட்ட அந்தப் பெண் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? **“விஜய் நடித்த ‘தெறி’ படத்தில் குற்றவாளிகளுக்கு கொடுக்கும் தண்டனை போல் இவர்களுக்கும் தண்டனை கொடுக்க வேண்டும். விஜய் ரசிகையாக இருந்த பாவத்துக்கு எனக்கு இது தேவையா? எனக்கு நீதி வேண்டும். முதலமைச்சர் விஜய் என்னை அழைத்து என்ன நடந்தது என்று கேட்க வேண்டும். இந்த மாவட்டத்தில் இரண்டு அமைச்சர்கள் உள்ளார்கள். ஒருவரும் என்னிடம் என்ன நடந்தது என்று இதுவரை கேட்கவில்லை”** என்று சொல்லி இருக்கிறார்.

படத்தில் விஜய் செய்வதை எல்லாம் நிஜத்தில் செய்வார் என்று மக்கள் நினைத்து வாக்களித்ததால்தான் தமிழ்நாடு இன்று தலைகுனிந்துள்ளது. **‘நீங்க ஆக்ஷன் ஹீரோ போல ஆக்ஷன் எடுப்பீங்கன்னு நினைச்சுதான் வோட்டு போட்டோம்’** என்று கோவையில் ஒரு பெண் கதறியதையும், **‘தெறி’ படம் போல தண்டனை கொடுக்க வேண்டும்** என்று ஸ்ரீவைகுண்டம் பெண் சொல்வதையும் பார்த்து **‘சினிமா மாயை’** எந்தளவுக்கு சமூகத்தை பாழ்படுத்தி இருக்கிறது என்பதை நினைத்து வேதனையாக இருக்கிறது. **சினிமாவில் ஹீரோவாக நடித்த விஜய், முதலமைச்சர் ஆனதும் வில்லனாக இருக்கிறார் என்பதற்கு ஸ்ரீவைகுண்டம் சம்பவம் ஒரு உதாரணம்.**

பாலியல் வன்கொடுமை செய்த பாலசுப்பிரமணியம், ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் உடன் இருக்கும் படம் வெளியாகி இருக்கிறது. கட்சித் துண்டுடன் இருக்கிறார் சரவணன். எனவே இது சமீபத்தில் எடுத்த படம்தான். பேட்டி கொடுத்த சரவணன், கைதானவர்களை எனக்குத் தெரியாது என்று சொல்லவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணிடம் அமைச்சர் ஆனந்த் பெயரை சரவணன் சொல்லி இருக்கிறார். எனவே அனைவர் மத்தியிலும் கடந்த ஒரு மாதமாக இப்பிரச்சினை பேசப்பட்டு வந்துள்ளது. கட்சியை விட்டு இருவர் நீக்கப்பட்டுள்ளனர். அந்தப் பெண்ணும் நீக்கப்பட்டுள்ளார் என்றால் விஜய்க்கு இந்த பிரச்சினை முழுமையாகத் தெரியும். தெரிந்தே அநீதி செய்துள்ளார் விஜய்.

இதை வைத்துப் பார்க்கும் போது, ‘சிங்கப் பெண் படை’ என்பதே **கண் துடைப்பு படையாகத் தான்** இருக்கப் போகிறது. குற்றம் நடக்காமல் தடுக்க இதை விஜய் உருவாக்கப் போகிறார். ஸ்ரீவைகுண்டத்தில் உண்மையான குற்றவாளி யார் என்று பாதிக்கப்பட்ட பெண்ணே சொல்கிறார். ஆனால் அவர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் விஜய் எடுக்கவில்லை. **துர்நாற்ற ஆட்சி நடத்தி வருகிறார் விஜய்.**

●●

## காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளால்

# ‘இந்தியா’ கூட்டணி முன்பை விட அதிக அளவில் பிளவு!

### ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

**சென்னை, ஜூன் 11 - காங்கிரஸ் கட்சியின் மோசமான செயல்பாடுகளால் ‘இந்தியா’ கூட்டணி முன்பை விட அதிகமாகப் பிளவு பட்டுள்ளது என்றும், இக்கூட்டணி நாளுக்கு நாள் வலுவிழந்து வருவதாகவும் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.**

‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில், ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றதாக தெரிவித்துள்ளது.

இதில், இக்கூட்டணியின் மிகவும் சக்திவாய்ந்த தென்னகத் தூணாக விளங்கிய தி.மு.க. கலந்து கொள்ளவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்கு பின்பு காங்கிரஸ் செய்த துரோகங்களை தொடர்ந்து இந்த கூட்டத்தை தி.மு.க. புறக்கணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், ‘இந்தியா’ கூட்டணியில் இருந்து ‘ஆம் ஆத்மி’ கட்சியும் விலகி இருக்க முடிவு செய்து ஒதுங்கியுள்ளதாக ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. ‘இந்தியா’ கூட்டணியின் ஒரு அங்கமாக நாங்கள் இல்லை என்று அக்கட்சி முறைப்படி அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

‘இந்தியா’ கூட்டணியை முதன் முதலில் தொடங்கியபோது அதில் 25க்கும் மேற்பட்ட கட்சிகள் இருந்த நிலையில், ஒவ்வொரு கட்சியாக கூட்டணியிலிருந்து விலகி வருகின்றன என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள், பல்வேறு மாநில தேர்தல்களில் எதிரெதிர் திசையில் களம் கண்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கும் இடது சாரிகளுக்கும் இடையே சமூகமான உறவு இல்லை.

இதேபோன்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் பெரிய ஈடுபாட்டுடன் இல்லை. கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளும் அதிருப்தியில் தான் உள்ளன. இதனால் எந்தவித இணக்கமும் இன்றி காணப்படும் ‘இந்தியா’ கூட்டணி நாளுக்கு நாள் வலுவிழந்து வருவதாகவும், காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளால் இக்கூட்டணி முன்பை விட அதிகமாகப் பிளவுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பா.ஜ.க. முன்னேறவே வழிவகுக்கிறது என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

## க.திருநாவுக்கரசு தலைமை! நக்கீரன் கோபால் நோக்க உரை!

# சின்னகுத்தூசி 92ஆவது பிறந்தநாள் - விருது வழங்கல்!

### புலவர் செந்தலை கவுதமன் விருதுகள் வழங்கி சிறப்புரை!

### வாழ்நாள் சாதனையாளர் விருதை கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெறுகிறார்!

*சென்னை, ஜூன் 11 - மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி அவர்களின் 92ஆவது பிறந்தநாள் மற்றும் விருது வழங்கும் விழா 20.6.2026 சனிக்கிழமை மாலை 6:00 மணியளவில் கவிக்கோ அரங்கம், எண்: 6, 2வது மெயின்ரோடு, சி.ஐ.டி. காலனி (மியூசிக் அகாடமி அருகில்) மயிலாப்பூர், சென்னை 600 004 ல் நடைபெறுகிறது.*

*இவ்விழாவில் சின்னக்குத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் ஆவுடையப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.*



*சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை தலைவர்-திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு தலைமை வகிக்கிறார்.*

*சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் நக்கீரன் கோபால் நோக்க உரையாற்றுகிறார்.*

*இவ்விழாவில் விருதுகள் வழங்கி புலவர் செந்தலை கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.*

*விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதை கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெறுகிறார்.*

*சிறந்த எழுத்தாளர் விருதை கவிக்கோ. துரை. வசந்தராசன், எழுத்தாளர் ஆழி. செந்தில்நாதன், ஊடகவியலாளர் சுகிதா சாரங்கராஜ் ஆகியோர் பெறுகின்றனர்.*

*சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை செயலாளர் கௌரா ராஜசேகரன் நன்றி கூறுகிறார்.*

*இவ்விழாவில் அனைவரும் பங்கேற்கும்படி சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

## தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து

# தமிழ் செய்தித் தொலைக்காட்சிகள் நீக்கம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



**சென்னை, ஜூன் 11- தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து சில தமிழ் செய்தித் தொலைக் காட்சிகள் நீக்கப்பட்டுள்ளன.**

**அதற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து @NewsTamilTV24x7, @polimernews மற்றும் @TamilJanamNews ஆகியவை நீக்கப்பட்டிருப்பது, பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பது மட்டுமின்றி ஜனநாயகத்திற்கும் எதிரானதாகும்.

அரசின் நிர்வாக திறமையின்மையை வெளிச்சமிட்டு காட்டும் ஊடகங்களை முடக்குவதும், மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாமல் அது முன்வைக்கப்படும் தளங்களையே இருட்டடிப்பதும் தான் த.வெ.க. அரசு அளிக்க விரும்பும் மாற்றமா?

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தூத்துக்குடி பாலியல் வன்கொடுமையில் தொடர்புடைய

# த.வெ.க.வினர் மீது நடவடிக்கை எடுக்க தயக்கம் ஏன்?

### தி.மு.கழக ஐ.டி. விங் கேள்வி!

சென்னை, ஜூன் 11 – தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சமீபத்தில் தூத்துக்குடியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, த.வெ.க. நிர்வாகிகள் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்ததையும், அதை மறைக்க த.வெ.க. எம்.எல்.ஏ. கொலை மிரட்டல் விடுவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றம் சாட்டுவதையும் குறிப்பிட்டுள்ளது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத, இப்படி ஒன்று நடக்கிறது என்பதுக் கூட தெரியாத இந்த டம்மி CM தான், இந்தப் படையைத் தன் நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளப் போகிறாராம்! இதுதான் உங்களின் Women Safety லட்சணமா? என தி.மு.க. ஐ.டி. விங்க் கேள்வி எழுப்பியுள்ளது.

Social mediaவில் நியாயமான கேள்வி கேட்டால் கூட பெண்களின் குடும்பத்தார் வரை இழுத்து ஆபாசமாக வசைபாடும் உங்களின் ‘Abusive Warriors’ஐ அரவணைத் துக்கொண்டு, நீங்கள் பெண்களைக் காக்கப் போகிறீர்களா? இது அப்பட்டமான பாசாங்கு என தி.மு.க. ஐ.டி. விங்க் விமர்சித்துள்ளது.

தி.மு.க. ஆட்சியின் Pink Patrol வாகனங்களுக்கு ‘சிங்கப்பெண் படை’ என்று புதுசா Sticker ஒட்டுவதும், பெண் காவலர்களின் Uniformஐ மாற்றுவதும் தான் உங்க பிரம்மாண்ட திட்டமா? என வினவியுள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி, வெறும் மக்கள் தொடர்புக்கான கண்ணோட்டம் மற்றும் கதைக்கள விளம்பரங்கள் நிஜ பாதுகாப்பை தராது என்றும், இத்திட்டத்தின் தொடக்கம் காரணமே இல்லாமல் பலமுறை ஒத்திவைத்ததிலேயே உங்களின் அலட்சியம் அப்பட்டமாக தெரிவதாகவும் விமர்சித்துள்ளது.

இந்த படைக்கு தனியாக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? இது புது நிதியா? இல்ல பழைய Police fundsஐ பிரித்துச் செய்யும் கண்துடைப்பா? புதிய வாகனங்கள், சிசிடிவி ஒருங்கிணைப்பு மற்றும் உள்கட்டமைப்புக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு என்பதற்கு எந்த தரவும் அரசிடம் இல்லை.

உங்கள் Abusive warriorsக்கு அத்துப்படியான Cyber crimesஐ தடுக்க, கையாள, அதற்கான பயிற்சிகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் எங்கே? கேமரா முன் ஆக்ரோஷமாக dialogue பேசி Acting பண்ணு வதும், Sticker ஒட்டுவதும் வெற்று கைதட்டலை வேண்டுமானால் பெற்றுத் தரும்.

ஆனால் பெண்களுக்கான உண்மையான பாதுகாப்பு எங்கே? என அடுக்கடுக்காக கேள்வி எழுப்பியுள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி, Oxymoronக்கு முகமிருந் தால் அது Toxic Vettri Kazhagam போலத்தான் இருக்கும் என கடுமை யாக விமர்சித்துள்ளது.




புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் புதுக்கோட்டை வடக்கு – தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வந்து பிறந்தநாள் மற்றும் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, சூரியா வெற்றி கொண்டான், கவிச்சுடர்.கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கார்த்திக் தொண்டைமான், த.சந்திரசேகரன், துணை மேயர் எம்.லியாகத் அலி, அரு.வீரமணி, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, பி.ராஜேஸ்வரி, சு. சண்முகம், வே.ராஜேஸ், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், அ.ரெத்தினம், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ராஜசேகரன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர ஒன்றிய கழக செயலாளர்கள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து நிலை நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.